செய்தி வெளியீடு எண்:920 நாள்:18.10.2010.

## திருக்கோயில்களின் 10 ஆயிரம் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு 2 கோடியே 78 இலட்சம் ரூபாய்ச் செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்!

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்!

தமிழக அரசின் ஒருகால பூசைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றுப் பயனடையும் திருக்கோயில்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களிலேயே உள்ளன. இத்திருக்கோயில்களில் தொண்டு செய்துவரும் அர்ச்சகர்களும், பூசாரிகளும் குறித்த நேரத்தில் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்துவர ஏதுவாக, அவர்களுக்கு இலவசமாக மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுமெனச் சட்டப்பேரவையில் இந்த ஆண்டின் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தமிழக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்துவதற்காகத் தமிழகம் முழுவதிலும் 10 ஆயிரம் அர்ச்சகர்கள், பூசாரிகள் ஆகியோர்க்கு 2 கோடியே 78 இலட்சம் ரூபாய்ச் செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கிட அனுமதித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டிருந்தார். அந்த ஆணையின்படி, கொள்முதல் செய்யப்பட்டுள்ள 10 ஆயிரம் மிதிவண்டிகளையும் தமிழகம் முழுவதிலும் உள்ள அர்ச்சகர்கள், பூசாரிகள் ஆகியோர்க்கு இலவசமாக வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைப்பதன் அடையாளமாக சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று நடைபெற்ற விழாவில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 200 அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் முதலமைச்சர் கலைஞர் மிதி வண்டிகளை வழங்கி, வாழ்த்துகள் கூறினார்.

இவ்விழாவில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் பொங்கலூர் திரு.நா. பழனிச்சாமி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.ரா. சிவகுமார், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத், சீர்காழி திரு.சிவசிதம்பரம் ஆகியோரும், அரசின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதிலும் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் பணிகள் ஆங்காங்கே நடைபெறும்.

வெளியீடு:—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9